**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 433/2025**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. உலகநாதன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெரியகருப்பன்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **56** |
| | | | **Dated** | : | **25.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

கூடுதல் சாட்சி – 1, **திரு. உலகநாதன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அசா. 5 ஆக விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ஜெய்கணேஷ் அவர்களையும், காவல் ஆய்வாளர் திரு. பாலாண்டி அவர்களையும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் இருவரும் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் எனக்கு நன்கு பரிட்சையம். வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டு வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி

ஆய்வாளர் கடந்த 28.01.2023ம் தேதி பகல் 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தெப்பகுளத்துப்பட்டியைச் சேர்ந்த குமார் மகன் பிரபு என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்றுள்ளார். புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண். 66/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச.வின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் வழக்கின் முதல் விசாரணையை மேற்கொண்ட போது விபத்தில் காயம்பட்ட குமார் என்பவர் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தபோது, அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டபடியால், சட்டப்பிரிவு 304 (A) இ.த.ச.வின் படி பிரிவு மாறுதல் செய்துள்ளார். பின்னர் 01.02.2023ம் தேதி பகல் 11.00 மணிக்கு மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சென்று விபத்தில் இறந்துபோன குமார் என்பவரின் பிரேதத்தின்மீது, சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் வழக்கு கோப்பை சமர்பித்துள்ளார். ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளை விசாரணை செய்தபோது, உதவி ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை அவரிடமும் தெரிவித்ததால் மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்யாமல், விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 38 W 0587 இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. இளங்கோ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மேற்படி வாகனத்திற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விபத்தில் காயம்பட்டு இறந்துபோன குமார்

என்பவரின் பிரேதத்தை பிரேத கூறாய்வு மேற்கொள்வதற்காக தலைமை காவலர் திரு. செல்வராஜ் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். பிரேத கூறாய்வு மேற்கொண்ட மதுரை, அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. முகமத் நசிம் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார். 23.03.2023 ம் தேதி 11.15 மணிக்கு இவ்வழக்கு எதிரியான ஆஜர் எதிரி வாசுதேவன் என்பவரை காவல் நிலையம் முன்பாக காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து, அவர்களுடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி கடைகள், வீடுகள் ஆகிவற்றில் இருந்த நபர்களை புலன் விசாரணை அதிகாரி சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அசா. 1 புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு இந்த வழக்கிற்காக பின்னீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை ஆய்வாளர் நேரில் சென்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரும் ஆய்வாளரிடம் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், வழக்கிற்கும், இந்த

எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில் புலன் விசாரணை அதிகாரி கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.  சரிவர விசாரணை செய்யமால் இந்த எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 25.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.25 14:58:43 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**